


திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, முத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் திருப்பூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம், கோவை அரவிந்த் கண் மருத்துவமனை, முத்தூர் ஆரூரன் கோல்ட் பேங்கர்ஸ் இணைந்து நடத்திய 7ஆம் ஆண்டு இலவச கண் சிகிச்சை முகாமை கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் வெள்ளக்கோயில் ஒன்றிய கழகச் செயலாளர் கே. சந்திரசேகரன், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், பேரூர் கழக செயலாளர் செண்பகம். பாலு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பணியாற்றிய

# கழக - கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கு மனமார்ந்த நன்றி!

## நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணி அறிக்கை!

நெல்லை,மே 3-

நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர் சு.சுப்பிர மணியன் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

நெல்லை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளராக போட்டியிட முதல் முறையாக எனக்கு வாய்ப்பு அளித்து நெல்லை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுடன் என்னை அறிமுகம் செய்து வைத்த திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கும்,தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களுக்கும், துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக துணை பொதுச்செயலாளர், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் மண்டலப் பொறுப்பாளர்கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கும்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.நெல்லை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிப்பாண்டியன், உள்பட மாவட்ட, மாநில,மாநகர,ஒன்றிய, பகுதி, வட்ட, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கட்சித் தலைவர்கள்,நிர்வாகிகள்,தேர்தல் பணியை ஒருங்கிணைத்த தேர்தல் ஆணையத்தின் அலுவலர்கள், காவல்துறையினர், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்,தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தீவிரவாதத்தை போதிக்கும் பாகிஸ்தானுக்கு ராஜ்நாத் சிங் நற்சான்றிதழ் தந்தது தேசவிரோதம்! காங்கிரஸ் கடும் விமர்சனம்!

புதுடெல்லி, மே 3–

“தீவிரவாதத்தை போதிக்கும் பாகிஸ்தானுக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் நற்சான்றிதழ் தந்தது தேச விரோதம் என காங்கிரஸ் சாடி உள்ளது. கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் பேசிய ஒன்றிய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ”அரசு ஆதரவுடனான எல்லை தாண்டிய தீவிரவா தத்தை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு கவனத்தில் இருந்து இழக்க கூடாது. இந்த அச்சுறுத்தலை எதிர்த்து போராடுவதில் எந்த இரட்டை நிலைப்பாட்டுக்கும் இடமில்லை என்றார். தீவிரவாத மையங்கள் இனி தண்டனையில் இருந்து விடுபடாது என்பதற்கு இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் அதற்கு எடுத்துக் காட்டு என பேசியிருந்தார். (ஆனால் அவர் நேரடியாக பாகிஸ்தானின் பெயரை குறிப்பிடவில்லை. )

இதுகுறித்து காங்கிரஸ் பொது செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தன் எக்ஸ் பதிவில், ”பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், பிரதமரின் ஒப்புதல் மற்றும் தூண்டுதலுடன், பிஷ்கெக்கில் பேசும்போது, பாகிஸ்தானுக்கு வெட்கக்கேடான முறையில் நற்சான்றிதழ் கொடுத்துள்ளார். பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் மையமாக இல்லையா? இந்தியாவை குறி வைத்து தாக்குதல் நடத்தும் பயங்கரவாத மையங்கள் பாகிஸ்தானில் இல்லையா? பாகிஸ்தானில் இந்திய எதிர்ப்பு சித்தாந்த பயிற்சி இல்லையா? மும்பை, காஷ்மீரின் பஹல்காமில் திட்டமிட்டு பயங்கரவாதிகளால் தாக்குதல் நடத்தப்படவில்லையா? பாகிஸ்தான் தொடர்பான இந்த புதிய நிலைப்பாடு, அமெரிக்காவை திருப்திப்படுத்துவது மற்றும் சீனாவிடம் சரணடைதல் ஆகியவற்றில் பிரதமர் மோடியின் கொள்கையின் ஒருபகுதியாகும். பாகிஸ்தானுக்கு பாதுகாப்பு அமைச்சர் கொடுத்துள்ள நற்சான்றிதழ், கடந்த 2020 ஜீன் 19ல் சீனாவுக்கு பிரதமர் மோடி வழங்கிய விநோதமான நற்சான்றிதழ் போல தேச விரோதமானது. வெட்கக்கேடானது என கேள்விகளுடன் காட்டமாக விமர்சித்துள்ளார்.

# மே தினம் வாழ்க!

சனநாயக
**மே தினம்!**
தமிழ்நாட்டின் பெருமிதம்!
காரணம்;
**பேரறிஞர் அண்ணா!**
**முத்தமிழறிஞர் கலைஞர்!**

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!**
மேதினத்திற்கு பொது விடுமுறை!
மேதினத்திற்கு ஊதியத்துடன்
கூடிய விடுமுறை!
மேதின நினைவுச் சின்னம்!
மேதின விழா ! ஆகியன.
அன்றொரு நாள்!
அமெரிக்கா
சிகாகோ நகரில்
ஆர்த் தெழுந்த
பெருங்கூட்டம்
வடித்தெடுத்த
எட்டு மணி நேர வேலை
எட்டு மணி நேர ஓய்வு
எட்டு மணி நேர உறக்கம்!
இன்று வரை இயங்குகிறது!
உழைக்கும் வர்க்கத்தின்
உன்னதமாம்!

**எம் தலைவர்**
**முதல்வர்களுள் முதல்வர்! முத்துவேல்**
**கருணாநிதி ஸ்டாலின்**
தலைமையிலான
தங்கத் தமிழ் நாட்டில்!
மேதினியில் சிறந்த
மேதினம் வாழ்க!
திராவிடம் வாழ்க!
**திராவிட மாடல் வாழ்க!**



**பெரம்பூர் த. ஆறுமுகம்**
பொதுச் செயலாளர்
சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக
ஊழியர் முன்னேற்றச் சங்கம்
(தொ.மு.ச)



மே1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சூலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர், சூலூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் தளபதி முருகேசன் தொ.மு.ச. கொடியேற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் சூலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மன்னவன், பேரூர் கழக செயலாளர்கள் கௌதமன் (சூலூர்), விஸ்வநாதன் (கண்ணம்பாளையம்) தொ.மு.ச. பேரின்ப சீலன், சூலூர் பேரூராட்சி துணைத்தலைவர் சோலை கணேஷ், சூலூர் பேரூர் கழக முன்னாள் செயலாளர் செல்வராஜ், ஒன்றிய அவைத்தலைவர் பன்னீர்செல்வம், பொருளாளர் வடிவேல், தமிழ்நாடு சுற்றுலா வேன் உரிமையாளர் சங்கத் தலைவர் சௌந்தர்ராஜ், சம்பத் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஓய்வில் கூட மக்களோடு இருக்க விரும்பும் முதல்வர்!



காலை ஒன்பது முப்பது மணி இருக்கும்...

ஒரு முக்கிய மலைச்சாலையில் ஏறுவதற்காக குறுக்குச் சாலையில் இருந்து என் வாகனம் நுழைய வேண்டும். போலீஸார் நிறுத்தி... கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க சார், சி எம் வருகிறார். கான்வாய் போனவுடன் நீங்க கிளம்பிடலாம் என்கிறார். எங்களுக்குப் பின்னால் வந்த வாகனங்களும் அடுத்தடுத்து நிறுத்தப்படுகின்றன.

சி எம் என்றவுடன் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் பறக்க எத்தனிக்கும் முன்பே, நண்பர்கள் வா வா போய் பார்க்கலாம் என்று இறங்கி விட... பட்டாம்பூச்சிகளே சற்று ஓய்வெடுங்கள், நான் விரைவாகச் சென்றால் தான் முதலமைச்சரை தரிசிக்க முடியும் என்று அவற்றை ஆற்றுப்படுத்தி விட்டு, விரைவாக இறங்கி ஓடினேன்.

அவர் வருகின்றார் என்று தெரிந்தவுடன், அக்கம் பக்கத்திலிருந்தெல்லாம் மக்கள் சாலை ஓரங்களில் வந்து குவியத் துவங்கி விட்டனர். அனைவரிடமும் அழகான ஒரு அமைதி... தள்ளு முள்ளுவெல்லாம் இல்லை... சார் கொஞ்சம் நகர்ந்துக்கோங்க நாங்களும் கொஞ்சம் அவரை பார்த்துக் குறோம்ன்னு பின்னால் இருந்து குரல்... ஒரு நடுத்தர வயது குடும்பம், குழந்தைகள்... நகர்ந்து அவர்களை முன்னால் வரச் சொல்லி விட்டு, நான் ஒரு 20 மீட்டர் தூரம் சென்று நின்று கொண்டேன்.

ஒவ்வொரு இடத்திலும், இதேப் போன்ற பின் குரல்களுக்கு மதிப்பளித்து, காத்திருந்த அந்த பத்து நிமிடத்தில், ஐந்து முறை 20 மீட்டர்கள் தூரம் சென்றுச் சென்று... துவக்கத்தில் நின்ற இடத்திலிருந்து 100 மீட்டர்கள் கடந்து வந்து விட்டிருந்த நிலையில் தான்...

தலைவரின் கான்வாய் வந்தது... நானோ கொஞ்சம் தன்னந்தனியாக... என்னைக் கடந்து சென்றால் தான் நூறு மீட்டருக்கு மக்கள் கூடியிருந்தனர். ஆனாலும் நம்பிக்கையோடு, தலைவர் வாகனம் வந்த நேரத்தில், அதன் அருகே முன்னேறி வணக்கம் வைத்த நிலையில், தலைவர் ஓட்டுனரிடம் வலது கையை நீட்டி, மேலிருந்து கீழே இரண்டு முறை இறக்கவே, வாகனம் மிக மெதுவான ஓட்டத்தோடு என் அருகே வந்தது.

வணக்கம் வைத்தவாறே, நல்லா இருக்கீங்களா தலைவரே என்றேன்...! அவரும் இரு கரங்களையும் கூப்பி வணக்கம் வைத்தவாறே, மிக அற்புதமான சிரிப்புடன் தலையை இரண்டு பக்கமும் இரண்டு முறை ஆட்டினார்...

நான் ஆடிப் போனேன்...!

தேர்தல் முடிந்த கையோடு, மூன்று நாட்களுக்கு ஊடக விவாதங்கள், யூடியூப் சேனல்கள், சமூக வலைதளங்கள் எங்கு வந்தாலும், விசில், விஜய் என்றே ஓலம் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்த நிலையில்... எனக்கு பல்வேறு நண்பர்கள், உறவினர்கள், பொது மக்கள் என்று தொடர்ந்து ஃபோன் கால்கள். என்னங்க என்னென்னவோ சொல்றாங்க... நாம வந்துடுவோமா என்ற பயம் கலந்த கலக்கத்துடன் அனைவரும் கேட்க, நானோ அனைவருக்கும் தெளிவான விவரங்களைக் கூறி நம்பிக்கை அளித்து வந்தேன்.

இடையிடையே, தலைவர் அவர்களோ நாள்தோறும் கொடைக்கானல் மலையில் தொடர்ந்து மக்களைச் சந்தித்தவாறே, அவர்களோடு உரையாடியவாறே... மக்களோடு மக்களாக கலந்து நின்று, தன்னுடைய ஓய்வைக் கூட மக்களோடு இருப்பதையே விருப்பமுற்றவராக செயலாற்றிக் கொண்டிருந்தார்.

தேர்தல் முடிந்து விட்டது. இனி மக்களைப் பார்க்க வேண்டிய அவசியம் உடனடியாகக் கிடையாது. ஆனாலும் இந்த மனுஷன் இப்படி, மக்களுடன் இவ்வளவு உற்சாகமாக பின்னிப் பிணைந்து உழன்று கொண்டிருக்கின்றாரே...?!

ஒட்டு மொத்த ஊடகமும், ஒரு நடிகன் தான் அடுத்து நாடாளப் போகின்றான் என்று கொக்கரித்துக் கொண்டிருக்க... அந்த ரீல் தலைவனோ, உழைக்க வேண்டிய நேரத்தில், தொகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து, வேட்பாளர்களை அறிமுகம் செய்யாமல் ஓய்வெடுத்து விட்டு... இப்பொழுது கோவில் கோவிலாகச் சென்று யாகம் பூஜை என்று சென்று கொண்டிருக்க...

இந்த ரியல் தலைவரோ... இப்பவும் மக்களோடு நின்று கொண்டிருக்கின்றாரே... அவர் உலா வந்து கொண்டிருக்கும் அதே ஊருக்குத் தான் நானும் வந்திருக்கிறேன், அவரை தேர்தல் முடிவுகளுக்கு முன்பாக ஒரே ஒரு முறை நேரில் தரிசித்து விட்டால், அதுவும் எந்த முயற்சியும் இன்றி இயல்பாகவே நடந்தேறி விட்டால்... அவர் தான் தமிழ்நாட்டின் அடுத்த முதலமைச்சர்... இப்படி எல்லோருக்குமே ஒரு முட்டாள் தனமான, ரெண்டு விரல்ல ஒன்னைத் தொடுங்கற மாதிரி ஒரு செண்டிமெண்டல் உள்ளுணர்வு வருமே... அப்படித்தான் எனக்கும்...!

நான் அதை மறந்தே விட்டிருந்த நிலையில் தான், தலைவரின் இந்த தரிசனம்..!

அவர் அரசியல் தலைவர் மட்டுமல்ல.... அதையும் தாண்டி...!

வாழ்த்துக்கள் தலைவரே... திராவிடம் 2.0 வுக்கு..!

**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி
துணைச் செயலாளர்



### பெரியாரியல் அறிஞர்

# வே.ஆனைமுத்துவின் மூத்த மருமகன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, மே 3-

பெரியாரியல் அறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் மூத்த மருமகன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சீனு அரிமாப்பாண்டியன் (அரிகிருட்டிணன்) அவர்கள் 1.5.2026 வெள்ளிக் கிழமை விடியற்காலை 4.00 மணிக்கு சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் இயற்கையில் கலந்தார்.

இச்செய்தியறிந்ததும் கழகத்தினர் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இன்று (3.5.2026 - ஞாயிறு) காலை அவரது உடல் புதுவை இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு மாலை வீரவணக்க இறுதிஊர்வலம் நிகழும்.




ஈரோடு வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.பெருமாள்சாமி தலைமையில் கோபிசெட்டிபாளையம், அந்தியூர், பவானிசாகர் சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக செயலாளரும், கோபி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளருமான என்.நல்லசிவம் முன்னிலையில் வாக்கு எண்ணிக்கையின் போது முகவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றி வழக்கறிஞர்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் அந்தியூர் சட்ட மன்ற தொகுதி வேட்பாளர் எம்.சிவபாலன், பவானிசாகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பி.எல்.சுந்தரம், கோபி தொகுதி தேர்தல் பொறுப்பாளரும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான வி.சி.சந்திரகுமார், அந்தியூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.ஜி.வெங்கடாசலம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.